கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-

## குறளமுதம்–51

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்–6–அறத்துப்பால்–வாழ்க்கைத்துணை**

மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்குண நற்செயல்கள் உடையவளாய், தன்னை மணந்துகொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு செட்டாக வாழ்க்கை நடத்துபவளே வாழ்க்கைத் துணையாவாள்.

மலர்–05 ஜனவரி–2012 இதழ்–51

### பனை தென்னை வள அ.கூ.சங்கங்கள்

# அபிவிருத்தியின் வீச்சை அதிகரித்திட வேண்டும்!

### கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்



2012ம் ஆண்டு நடைபெறவுள்ள 90வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவின்போது ஒவ்வொரு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் தனது அங்கத்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு வீடு ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி-வசந்தகுமார் கேட்டுக் கொண்டார்.

அண்மையில் யாழ்.பொதுசன நூலகத்தில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 2012ம் ஆண்டு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியவாறு அவற்றை இனங்கண்டு அவற்றுக்குரிய தீர்வுகளைக் காண முற்பட வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருட்களின் தரங்களை மேம்படுத்தி சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (8ம் பக்கம் பார்க்க)

### தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!



கற்பகம் வாசகர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் கற்பகம் இதழின் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

# சமாசத்திற்கு காணி நன்கொடை!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆரம்ப காலச் செயலாளரும் பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் செயலாளருமாகிய க.நடராசா (ஆசிரியர்) அவர்களால் சாவகச்சேரி,மந்துவில் பகுதியில் அமைந்துள்ள அவருக்கு சொந்தமான சுமார் 7 3/4 பரப்பு காணியின் உரிமையை சமாசத்தின் பெயருக்கு மாற்றி எழுதிய உறுதிப்பத்திரத்தை அவரது சகோதரர் எஸ்.தங்கராசா மூலம் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது சமாசத் தலைவர் மற்றும் கூ.அ.உதவி ஆணையாளர் ஆகியோரிடம் கையளித்தார்.





"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"பிறருக்கு லஞ்சம் வழங்கி ஆசையைத் தூண்ட வேண்டாம். அன்றேல் நீங்களும் லஞ்சம் வாங்கி கீழ்த்தரமாக வேண்டாம்" –சத்தியசாயி பாபா–

## கற்பகக்கரு

# கல்வி அபிவிருத்தி திட்டமும் பனைவள நிறுவனங்களும்!

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன கடந்த 1992ம் ஆண்டு தொடக்கம் கல்வி அபிவிருத்தி வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருகின்றன.

இந்த வகையில் ஒவ்வொரு சங்கங்களும் தனது வருடாந்த கல்வித் திட்டத்தினை தயாரித்து, அத்திட்டத்துக்கு நிதி ஒதுக்கினை செய்து, அந்நிதி ஊடாக அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளின் ஆரம்பக் கல்விக்காக அங்கத்தவர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பாலர் முன் கல்வி நிலையங்களை உருவாக்கி கல்வி போதிப்பதுடன், பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரைக்குமான கல்வி விஸ்தரிப்பு வேலைத்திட்டத்துக்கென பெருமளவிலான நிதியினையும் இந்நிறுவனங்கள் ஒதுக்கீடு செய்கின்றன.

வடமாகான சமாசமானது தமது கல்வி விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ், சமாசத்தில் உறுப்புரிமை பெற்ற சங்கங்களின் அங்கத்தவர்களதும், பணியாளர்களதும் சுமார் 4,000ற்கு மேற்பட்ட கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு வருடாந்தம் தலா சுமார் 300 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றது. அத்துடன் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கி, அவர்களை கல்வியில் மேலும் நாட்டம் கொள்ளச்செய்யும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. 2012ம் ஆண்டிலும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட நிதிய நடைமுறை விதிக்கு அமைய ஏனைய மாணவர்களும் பயன்பெறத்தக்க திட்டங்களையும் செயற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பனை தென்னை வளச் சங்கங்களும், கொத்தணிகளும் தமது கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை தத்தமது நிதி நிலைமைகளுக்கு ஏற்ப மிகச் சிறப்பான வகையில் மேற்கொண்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக முன்பள்ளிகள் பலவற்றை பொறுப்பெடுத்து நிர்வகிப்பதுடன், முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவு, சீருடைகளையும், ஆசிரியர்களுக்கான வேதனம், இலவச சீருடை என்பவற்றையும் வழங்கி முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கு உறுதுணைபுரிகின்றன. அத்துடன் 5ம்ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த. (சா/த), (உ/த) என்பவற்றில் சித்திபெற்ற மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிதியினை வழங்கி, அவர்களை கௌரவித்தும் வருகின்றன.

இவ்வாறான கல்விச் செயற்பாடுகள் அனைத்தையும் இந்நிறுவனங்கள் தமது சொந்த நிதியினை மட்டுமே பயன்படுத்தி மேற்கொண்டு வருவது என்பது இக்கூட்டுறவுச் சங்கங்களின் அளப்பரிய ஓர் பணியாகும்.

இவ்வாறு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கூட்டுறவு கொள்கையின்படி செயற்படுகின்ற ஒரு சிறந்த கூட்டுறவு அமைப்பாக பனை தென்னை வள நிறுவனங்கள் விளங்குகின்றமை ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஓர் முன்னுதாரணமாகும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்டுகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

–ஆசிரியர்–

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

# அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறைவிதி 5

(முன்னையதிலிருந்து திருத்தம் செய்யப்பட்டு கூ.அ.உ. ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது)

**7. சிறந்த அங்கத்தவர், பணியாளரை கௌரவித்தல்**

2002ம் ஆண்டு முதல் சமாசத்தால் வருடம்தோறும் சிறந்த அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். இதில் 2011ம் ஆண்டு தொடக்கம் பணியாளர்களையும் உள்ளடக்கி, வருடம் முழுவதும் எதுவித குற்றங்களையும் செய்யாத பணியாளராகவும் சங்கத்தின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் கூட்டுறவுப் பணியாளர்களுக்குரிய அனைத்துப் பண்புகளையும் கொண்ட பணியாளரையும் சங்க நிர்வாகம் தெரிவு செய்து சமாசத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

சங்கங்களிலிருந்து தலா ஒவ்வொரு பணியாளரையும் கொத்தணி, சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியவற்றின் ஒவ்வொரு பணியாளரும் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் அவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுவர். இத்தெரிவுகளுக்கு சங்கமும், சமூக அபிவிருத்தி நிதிக் குழுவும், சமாச நிர்வாகமும் பொறுப்பாக இருப்பர்.

**8. சமூக நலத்திட்டங்கள்**

1990ம்ஆண்டு சமாசத்தால் உருவாக்கப்பட்ட விபத்து ஓய்வூதிய நலத்திட்டம் காலத்திற்கு காலம் விரிவுபடுத்தப்பட்டு 01.07.2006ம் ஆண்டு தொடக்கம் 60 வயதினைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களுக்கு அவர்களது பங்களிப்பிற்கு ஏற்ப 11% மாதாந்த ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது. இவ்ஓய்வூதிய நலத்திட்டத்திற்கு வருடம்தோறும் இந்நிதிக்கு வங்கி வழங்கும் வட்டி வீதத்தில் சமூக அபிவிருத்தி நிதிக் குழுவினதும் சமாச நெறியாளர் சபையினதும், கூ.அ.உ. ஆணையாளரினதும் ஆலோசனை பெறப்பட்டு ஒரு தொகை நிதி ஒதுக்கப்படுதல் வேண்டும்.

**9. மருத்துவ உதவி வழங்கல்**

சமூக நலத்திட்டத்தின்கீழ் அங்கத்தவர்கள், பணியாளர்கள், அவர்களது கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை ஆகியோர் பாரிய நோய்வாய்ப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டால், ரூபா 25,000.00 கொடுப்பனவு வழங்கல்.

9.1 பாதிப்புத் தன்மை வருமாறு

இதய சத்திரசிகிச்சை, சிறுநீரக சத்திர சிகிச்சை, குடல் சம்பந்தமான சத்திரசிகிச்சை ஆகிய பாதிப்புகளுக்கு மேற்கூறப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படலாம்.

9.2 நடைமுறைவிதி 9:1ல் கூறப்பட்ட விடயம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக்கொடுப்பனவுகள் யாவும் நடைமுறை விதி 5:2இல் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக வழங்கப்படும்.

9.3 ஏனைய வகைப் பாதிப்புகளுக்கான கொடுப்பனவுகள்

9.3.1 மேற்கூறப்பட்ட பாதிப்புக்களாவன: ஒரு கண்ணை இழத்தல், அல்லது இரு கண்களையும் இழத்தல், கால்கள் செயற்படமுடியாமை, கைகள் செயற்படமுடியாமை போன்ற பாதிப்புக்களால் இயங்க முடியாமை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்களுக்கு அதற்கு ஏற்ற உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு நிதி வழங்கல்.

இத்திட்டத்தில் இணைந்து கொண்ட அங்கத்தவர்கள், பணியாளர்கள் (பாதிப்பு ஏற்படும்போது பணியில், உற்பத்தியில் ஈடுபட்டவராக இருத்தல் வேண்டும்) பின்வரும் விபரப்படியான கண் பாதிப்புக்களுக்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிதியை உதவு நிதியாக வழங்கல் வேண்டும்.

9.3.2 கண்பார்வைக் குறைவு ஏற்பட்டு ஒரு கண் இழத்தல் ரூபா 5,000.00.

9.3.3 கண்பார்வகை குறைவு ஏற்பட்டு இரு கண்களையும் இழத்தல் ரூபா 10,000.00

(வளரும்)

# 3 பதநீர்

வடக்கு கிழக்கு தால மூலவள அபிவிருத்தி நிறுவனத்தின் "பனைச் செல்வம்" என்னும் நூலிலிருந்து...

ஒரு பூந்துணரில் இருந்து சாறு வெளிவரும் வீதம் நாள் முழுவதும் ஏறக்குறைய சீராக இருக்கும். ஒரு நிமிடத்திற்கு ஒரு சிறந்த பாளையிலிருந்து 2.86 மி.லீற்றர் சாறு பெறப்படும்.

### பதநீரைப் பாதுகாத்தல்

பதநீரிலிருந்து பாணி, பனங்கட்டி, பனம்சீனி, பனங்கற்கண்டு என்பவற்றைத் தயாரிப்பதற்குப் பதநீர் சேகரிக்கப்படும் கொள்கலன்களிலேயே சுவைநீர் நொதிப்படைந்து கள்ளாக மாறாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் சுவைநீரிலுள்ள முழு இனிப்புச் சத்தும் (சுக்குரோஸ்) பாதுகாக்கப்படும். இதுவே மேற்கூறிய உணவுப் பொருட்களின் பிரதான மூலகமாகும். ஒரு வித்திலைத் தாவரங்களான (Palm) பாமே குடும்பத் தாவரங்களிலிருந்து பெறப்படும் சாற்றினைப் பாதுகாத்தலில் பல முறைகள் உள்ளன. தாலவள மரங்களான பனை, தென்னையினைப் பொறுத்தவரை யாழ். குடாநாட்டில் மண்முட்டிகளினுள் (கலயங்கள்) சுண்ணாம்பு பூசும் முறையே கைக்கொள்ளப்படுகின்றது. இது ஓர் சிறந்த முறையாகும். ஆயினும், பதநீரைப் பதப்படுத்தும்போது இச்சுண்ணாம்பினை அகற்றுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அத்துடன் கணிசமான பதநீரும் கழிவுப்பொருளான மண்டியுடன் விரயமாக்கப்படுகின்றது. வேறு நாடுகளில் சில மரப்பட்டைகளையோ, இலைகளையோ பதநீர் சேகரிக்கும் கொள்கலன்களில் இடுவதன்மூலம் பதநீர் ஓரளவுக்குப் பழுதடையாது பாதுகாக்கப்படுகின்றது. இம்முறை இலங்கையில் "கித்துள்" மரத்தில் கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

### தாவர மரப்பட்டைகள் இலைகள் மூலம் பாதுகாத்தல்

இம்மரப்பட்டைகளில் சிறந்தது "ஹல்" (Vateria Copalifera) என்ற மரத்தின் பட்டையாகும். இந்தோனேசியாவின் சில பகுதிகளில் மர முந்திரிகைகளின் (Anacardium occidentale) உலர்ந்த இலைகளின் தூள் கொள்கலன்களில் இடப்படுவதன் மூலமும் பதநீர் பாதுகாக்கப்பட்டுள்ளதனை ஆரம்ப ஆய்வுகள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாவல் மரப்பட்டைகளும், விதைத்தூள்களும் கொள்கலன்களில் இடப்பட்டும் பாதுகாக்கப்படுவதும் ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சில சமயங்களில் எவ்வித பொருட்களும் இடப்படாமலே பதநீர் சேகரிக்கப்படுகின்றது. பனை ஓலைப் பட்டைமூலம் பதநீர் சேகரிக்கப்படும்போது எந்தப் பொருட்களும் பதநீர்ப் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படவில்லை.

இம்முறையினை யாழ்ப்பாணத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டபோது 60% வெற்றியடைந்துள்ளது. இன்னும் கூடுதல் மாறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பதநீர் சேகரிக்கும் பட்டை (கொள்கலன்) உடன் மூடியும் இணைக்கப்படல் வேண்டும். மூடி பாதுகாப்பற்றதாகவுள்ளது. கித்துள் மரத்திலிருந்து சுவைநீர் பெறும்போது சில வல்லுநர்கள் பாக்குமர இலையின் அகலமான அடி மட்டையிலிருந்து செய்யப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்தி சுவைநீர் பெறுகின்றார்கள். இதன் உட்பகுதி அழுத்தமாக இருப்பதால் சுவைநீரினை பழுதடையச் செய்யும் நுண்ணங்கிகள் தங்க இடமில்லாது போகின்றது. அதனால் சுவைநீர் பழுதடையாது பேணப்படுகின்றது.

இதேபோன்று மண்ணினால் செய்யப்பட்ட முட்டிகளை (கலயங்கள்) பாவிக்கும்போதுகூட முட்டிகளின் உட்புறத்தினை அழுத்தமாகவும் வழுவழுப்பாகவும் மினுக்கி (Glazed) எடுக்கப்பட்டிருப்பின் நுண்ணங்கிகள் தங்குவது மட்டுப்படுத்தப்பட வாய்ப்புண்டு. முட்டிக்குள் மினுக்கு ஏற்படுத்துவதற்காக பரவின் மெழுகினை உருக்கி முட்டியின் உட்பகுதிகளில் நன்கு அழுத்தமாகப் பரவக்கூடிய முறையில் உருக்கி வார்த்தபின் பயன்படுத்தப்பட்டபோது ஓரளவு வெற்றியினைக்கொடுத்தது. ஆயினும், கலயத்துள் பூசப்படும் பரவின் மெழுகு கூடியளவு சூரிய வெப்பம் காரணமாக உருகி விடும் தன்மை காணப்படுவதால் உறுதியான முடிவு மேற்கொள்ள முடியவில்லை.

யாழ்.மாவட்டத்தில் கொள்கலனுக்குள் நாயுண்ணி இலைகளினை (Lantana-sp) கசக்கியபின் போடப்பட்டு பரீட்சிக்கப்பட்டபோதும் 50% வெற்றியினையே கொடுத்தது. தொடர்ச்சியான ஆராய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

### இரசாயனப் பாதுகாப்பு முறைகள்

தமிழகத்தில் மரத்தில் பதநீர் புளிப்படைவதனை தடுப்பதற்கு எமது முன்னோர்கள் சுண்ணாம்பினையே பயன்படுத்தி வருகின்றார்கள். இதற்கு மாற்றுப் பொருளாகக் கீழ்க்காணும் வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டன.

சல்பனாமைட், பாலூட்ரின், அரோமைகின் ஆகிய இரசாயன குளிகைகள் மூலம் பாதுகாக்கப்பட்டபோதும் தொடர்ந்து பதநீர் அருந்துவதால் உடலுக்குத் தீங்கு விளையும் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன.

சிலிக்கா ஜெல் எனும் செய்கை நுரை கற்களுக்குக் கந்தக வாயுவினைச் செலுத்தி அக்கற்களை சுண்ணாம்புக்குப் பதிலாக பதநீர் சேகரிக்கும் கலயங்களில் போட்டு பதநீரைப் பாதுகாக்க முடிந்தது.

குறிப்பிட்டளவு கந்தக வாயு செலுத்தப்பட்ட சிலிக்கா நுரைக் கல்லுகள் சிறு சிறு கண்ணாடிக் குழாய்களில் அடைக்கப்பட்டு பனைத் தொழில் வல்லுநர்களிடம் கொடுத்து பதநீர்க் கலயங்களில் போடப்படுகின்றது. சுவைநீர் சொட்டும்போது சிலிக்கா ஜெல் மீது படுகின்றது. உடனே கந்தகவாயு குமிழ்விட்டு வெளியேறிச் சேகரமான பதநீருக்குள் பரவுகின்றது. இதனால் பதநீர் புளிப்படையாது காதுகாக்கப்படுகின்றது.

பதநீர்க் கலயங்களில் சேகரமான பதநீரை மறுநாள் காலையில் எடுத்தவுடன் சிலிக்கா ஜெல்லை வெளியே எடுத்து சுத்தமான நீரில் கழுவிக் காயவைத்தபின் மீண்டும் கந்தக வாயுவைச் செலுத்திப் பயன்படுத்தலாம். இவ்வாறு பாதுகாக்கப்பட்ட பதநீர் பருகுவதற்கு ஏற்ற மணமும், சுவையும் உடையதாகவுள்ளது.

இதனை மூலப்பொருளாகக் கொண்டு பனைவெல்லம், பாகு, பனஞ்சீனி முதலியவைகளை நேரடியாகச் செய்யலாம். பதநீரில் கரைந்துள்ள மிகக் குறைந்தளவு கந்தகவாயுவும் பதநீர் கொதிநிலை அடையும்போது வெளியேறி விடுகின்றது. பனைவெல்லம், பாகு முதலியவற்றின் தரம் மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது.

### பதநீரை இறக்கியபின் பாதுகாத்தல்

பனை மரங்களிலிருந்து இறக்கிய பதநீரை நெடுநேரம் வரை காதுகாக்க முடிவதில்லை. ஏறக்குறைய மூன்று மணித்தியாலங்கள் வரை புளிப்படையாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். பின் வரும் முறைகொண்டு நீண்டநேரம் பாதுகாக்கலாம். (வளரும்)

## வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களின் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கான மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்தை பெற்றவர்களில் ஒரு தொகுதியினரைப் படங்களில் காணலாம்.

### சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


மு.குணரத்தினம்


க.காந்தி



மு.விமலராசா


செ.மரியதாஸ்


நா.முருகானந்தம்


க.பாலசிங்கம்


கா.முத்துலிங்கம்


இ.ஆறுமுகம்


வ.முத்துராசா


இ.நாகராசா


க.சண்முகநாதன்


க.மாணிக்கம்


க.செல்வராசா


செ.பூபாலசிங்கம்


செ.நடராசா


திருமதி சி.சுந்தரலிங்கம்



கு.இராசேந்திரம்


மு.நாகேஸ்வரநாதன்



கா.செல்லத்துரை

### அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


இ.குணராசா


செ.மகாலிங்கம்


சி.தங்கராசா


க.கிருஸ்ணராசா


கோ.கந்தசாமி


பொ.குமாரசிங்கம்



ஐ.தவராசா


கோ.மாணிக்கம்


க.இராசரத்தினம்


பொ.குமார்


திருமதி அ.டையேஸ்வரன்



# வலிமைமிக்கது கூட்டுறவு!

வ.சிவகுமார்

உலகிலே முதல் முதலில் இங்கிலாந்து தேசத்தில்தான் கூட்டுறவு உருவாகியது என நாம் பாடப் புத்தகங்கள் வாயிலாக அறிகிறோம். இருந்தபோதிலும் எமது மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையானது அதாவது, முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய முறைமைகள் யாவும் கூட்டுறவு முறைகளை பறைசாற்றுகின்றன. எமது மூதாதையர்கள் வாழ்ந்த காலத்தில் காணிகளுக்கு எல்லை கிடையாது. ஒரே காணியாக இருக்கும் அந்த வளவில் பல குடும்பங்கள் சிறு வீடுகளை அமைத்து வாழ்வார்கள். எல்லோருக்கும் பொதுவாக ஒரே ஒரு கிணறு மட்டும் இருக்கும். அது எல்லோராலும் சேர்ந்து அமைக்கப்பட்டதாக இருக்கும். அக்கிணற்று நீர்தான் அவர்கள் எல்லோரதும் வாழ்வாதாரத்துக்கான மூலம். ஒருவரது குடிசைக்கு அருகில் மாமரமும் இன்னொருவருவரது குடிசைக்கு அருகில் பலா மரமும், மற்றவரது குடிசைக்கு அருகில் வாழை மரமும் வேறொருவருடைய குடிசைக்கு அருகில் தென்னை மரமும் என இப்படியாக பலப்பல பயன்தரு மரங்கள் வளர்க்கப்பட்டு இருக்கும். அந்தந்த பருவ காலத்துக்கு ஏற்ப கிடைக்கும் பழங்களை பகிர்ந்து உண்ணும் பழக்கமும் அவர்களிடையே வலுவாகக் காணப்பட்டது. இதன்மூலம் “கூடி உழைத்தல், மகிழ்வுடன் வாழ்தல்” என்ற பண்பை அன்றே எமது மூதாதையர்கள் கைக்கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

ஆனால் இன்று அப்பண்புகள் எம் மத்தியில் காணப்படுகின்றதா?

17ம், 18ம் நூற்றாண்டுகளில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதன் பயனாக சிறிய அளவிலான உற்பத்திகள் யாவும் இயந்திரங்களின் மூலம் பெருமளவில் உற்பத்தி செய்யும் நிலை ஏற்பட்ட பின்னர் எம்மிடையே முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடுகள் அரும்பத் தொடங்கியது. பணம் படைத்தவர்கள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளை அமைத்து ஏழை மக்களை அதில் குறைந்த ஊதியத்துடன் நீண்ட நேரத்துக்கு புணிபுரிய வைத்ததோடு, பணியாளர்களின் பிள்ளைகளும் அத்தொழிற்சாலைகளில் பணிபுரிய நிர்ப்பந்திக்கப்பட்டமையும், ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் முதலாளியின் தொழிற்சாலையில் பணிபுரியும் அடிமை நிலை ஏற்பட்டதன் காரணமாக அம்மக்கள் ஒன்றுகூடி சிந்தித்தமையாலும், அக்காலத்தில் அச்சமூகத்தில் பற்றுடையவர்கள், நல்ல சிந்தனையாளர்கள், சுயநலமில்லாத பொதுநலவாதிகள் ஆகியோர் சிந்தித்து செயற்பட்டதன் விளைவே கூட்டுறவு உருவாக்கத்திற்கான மூலகாரணமாக விளங்கியது. இவ் உருவாக்கத்திற்கு மூல கர்த்தவாக விளங்கியவர் றொபேட் ஒவன் என்பவராவார். இவர் இங்கிலாந்து நாட்டின் ஒரு வறிய குடும்பத்தைச் சார்ந்தவர். இவரால் 1984ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே முதலாவது கூட்டுறவு அமைப்பாகும்.

கூட்டுறவின் கொள்கைகளில் காலத்துக்கு காலம் கால மாற்றம், மக்கள் தேவைகள், மக்களது மன நிலை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கூட்டுறவு அமைப்பு ஒரு மக்கள் அமைப்பாக விளங்கியதால் இவ் அமைப்பு உலக நாடுகளில், அந்தந்த நாடுகளின் மூலவளத்தைக்கொண்டு உருவாக்கப்பட்டன. மூல வளங்களை உற்பத்தியாகக் கொண்டு உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினராக நேரடியாக இணைந்த கூட்டுறவு அமைப்புக்கள் இன்று வெற்றிகரமாக தமது நோக்கத்தை நிறைவேற்ற பாடுபட்டு வருகின்றன. இவ்வகை அமைப்புக்களில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் அடங்குகின்றன. அதாவது உற்பத்தியாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு அவ் அங்கத்தவர்களே தமது நிறுவனத்தை நிர்வகித்து வருகின்றமை உண்மையான கூட்டுறவு அமைப்புக்கு ஓர் நல்ல முன்னுதாரணம். தமது தேவைகளை தாமே சிந்தித்து அதற்கான திட்ட வரைபுகளை வரைந்து, அதனூடாக நடைமுறை விதி உருவாக்கப்பட்டு உரியவர்களின் ஆலோசனைகளையும் அனுமதியையும் பெற்று சிறப்பாக செயற்பட்டுவரும் அமைப்புக்களாக இச்சங்கங்களை நாம் காணலாம்.

கூட்டுறவுப் பண்பானது கூடி வாழும் பண்போடு, ஏனையவர்களுடன் கூடி உழைத்தல் அதன்மூலம் மகிழ்வோடு வாழ்தல் என்பது தானாகவே ஏற்பட்டது. உலகியல் வாழ்வில் இச்செயல்களை ஏனைய உயிரினங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. கூட்டுறவு (Co-operative) என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து பிறந்த ஒரு சொல்லாகும் என அறிஞர்கள் கூறுகிறார்கள்.

1972ம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் பனை வளம்சார் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட ஒருசில முதலாளி வர்க்கத்தினரால் வேலைக்கு உட்படுத்தப்பட்டோராக இருந்த நிலை மாறி 1972ம் ஆண்டு உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்தன்று சாவகச்சேரியின் தனங்கிளப்பு என்ற பகுதியிலே முதலாவது பனை தென்னை வளச் சங்கம் உருவாக்கம் பெற்றது. (வளரும்)

## வாழ்வது வருமா ?

கற்பது காத்து கண்ணியமாக
கற்றவர் மனதில் நிலைத்திட்டபோதும்
சீதனம் கொடுத்து திருமணம் முடித்து
சீர்பல முடித்து வாழ்ந்திட நினைத்தும்
ஆடவர் மனத்தை உறவினர் கெடுக்க
ஆண்மகனவனோ தன்னிலை இழந்து
திருமணபந்தம் தந்தவள் தனையே
திருப்பி அனுப்பினான் தாய் வீடுசெல்ல
வாழ வந்தவள் சோபை இழந்திட
வாழ்த்திய நெஞ்சங்கள் கலங்கித் தவித்திட
உறவுகள் கூடியே ஏளனம் செய்திட
பிரித்திட்ட உறவுகள் நீலிக்கண்ணீர் வடித்திட
வாழ்வது வருமா நீ ஆண்மகன்தானா?

## கலக்கம்

சுயபுத்தி இன்றி
சொல்புத்தி கேட்டு
வாழ்ந்திடும் ஆடவர்
வாழ்வினில் உன்போல்
கவிஞர்கள் வருவார்
காரிகை வாழ்வில்
கலக்கத்தை தருவார்

ச.கிரோசிகா,
A/L(Com)
அச்சுவேலி மத்திய கல்லூரி

## சாக்கடை

புயலை உருவாக்கும்
வல்லமை படைத்தவர்கள்-இன்று
காதல் எனும் சாக்கடையில் விழுந்து
சாதனை படைக்கமுடியாமல் தவிக்கிறார்கள்!

## பாராட்டு

பா துடித்தோடும் பருவத்தில்
துவண்டு கிடக்காமல்
ரா துணிவுடன் எழுதும்
ட் எழுத்தாளனுக்கும் இன்று பாராட்டு
பாவைகளை வர்ணிக்கும்
டு பாவலனுக்கும் பாராட்டு!

## தாலாட்டு

குளு குளு மனம்கொண்டு
குதூகலிக்கும் புன்னகை சிந்தி
ஒய்யார நடை பயின்றபோது
ஒலித்த தாலாட்டு இன்னும்
என் காதைவிட்டு அகலவில்லை
அதுதந்த சந்தோசமும் மறையவில்லை!

## அப்பாவின் மிதிவண்டி

மி அப்பாவின் மிதிவண்டி
தினம் தினம்
தி கதிரவன் உதிக்கும்போது புறப்பட்டு
சந்திரன் வரும்போது வருகின்றது
வ நியதியிதுவென்றாலும்
ண் நிம்மதிப் பெருமூச்சு
தொண்டைக்குழியோடு
டி நிற்கிறது மிதிவண்டியுடன்

பா.மதனபாரதி-அல்வாய்

## தலைப்பிரசவம்

வரன்தேடி வழி நடந்து
வரதட்சணை கொடுத்தனுப்ப
கரம் நீட்டிப் பெறுகின்ற
கலாச்சாரம் இன்று இங்கு

இடர்பாடு ஏதுமின்றி
இருப்பதைத் தாம் கொடுக்க
கரம் பிடித்துக் களிகூர்ந்த
கலாச்சாரம் அன்று இங்கு

இருப்பதைப் பெற்றவர்க்கு
இன்னும் உதவிடவே
தலைப்பிரசவத்தை
தவறாது நடாத்தி வைத்தார்
அன்று இங்கு

கேட்டபடி தட்சணையை
கெட்டியாய்ப் பெற்றவரும்
தலைப் பிரசவத்தை - இன்றும்
தாய் வீட்டார் பொறுப்பென்று
தத்துவம் பேசுவது
தரம்கெட்ட செயல்தானே!

இ.காந்தன் - கோப்பாய்

## கவிதை உரம்

நீங்கள் எழுதுவது கணிதம்
நான் எழுதுவது கவிதை
கணிதம் வாழ்வின் பகுதி
கவிதை வாழ்க்கையின் பகுதி

என்கவிதைகளைப் போலவே
என்னையும் மதிப்பீடு செய்யத் தெரியவில்லை
என் கவிதைகள் என்றாவது பூக்கும்
பணத்துக்கும் புகழுக்காகவுமல்ல
பெற்றவர்களே என்னை மதிக்காதபோது
உற்றவர்களை எப்படி நான் எதிர்பார்ப்பது
மனசு கனத்தது..
மனசு கனத்தால் கண்ணீர்விடவேண்டும்
அல்லது கவிதை எழுத வேண்டும்
இரண்டையும் செய்தேன்
டைரி நனைந்தது
கவலையை எட்டத் துரத்தினேன்
கவிதையை நெஞ்சில் நிறுத்தினேன்.

அல்வையூர் ரூபன்

## கவியின்பம்

## அபிவிருத்தியின் வீச்சை ........ 1ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்.மாவட்டத்திலுள்ள வடமராட்சிக் கொத்தணி, வலிகாமம் கொத்தணி. தென்மராட்சிக் கொத்தணி ஆகியவற்றில் தற்போது இருப்பில் இருக்கும் மதுசாரத்தினை நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு அமைச்சர் ஊடாக தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள கூ.அ. உதவி ஆணையாளர்கள், சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் தத் தமது மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆணையாளரிடம் விரிவாக எடுத்துக் கூறினர்.

2012ம் ஆண்டு கூட்டுறவாளர் உற்பத்தி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை கூட்டுறவு நிறுவனங்கள் செய்வதற்கு முன்வரவேண்டும் எனவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

## அச்சுவேலி பனை தென்னை வள அபி. கூட். சங்கத்தால் தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பொதி அன்பளிப்பு



அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சங்க உறுப்பினர்கள் சுமார் 232 பேருக்கு தலா 500 ரூபா பெறுமதியான பொங்கல் பொதிகளை வழங்கியது.

சங்கத் தலைவர் செ.காந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூ.அ.உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்துகொண்டு பொங்கல் பொதிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உறுப்பினர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பொங்கல் பொதிகளை தெல்லிப்பளைச் சங்கம் வழங்கியது!



தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சங்க உறுப்பினர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் வைத்து பொங்கல் பொதிகளை அன்பளிப்பாக வழங்கி உதவியது.

இந்நிகழ்வில் சங்கத் தலைவர் க.அருணகிரிநாதன், செயலாளர் மு.தவபாலன், இயக்குனர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## யாழ். வர்த்தகக் கண்காட்சியில் பனைசார் உற்பத்திப்பொருட்கள்

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக சந்தைக் கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி -வசந்தகுமாரின் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க வடமாகாண பனை தென் னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களை இக்கண்காட்சியில் கலந்துகொள்ள வைத்தது.

பனைசார் உற்பத்திகளை மேற்கொண்டுவரும் வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுடன், யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கமும், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் கலந்து கொண்டு தங்களது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைத்ததுடன், இறுதி நாளன்று விற்பனையிலும் ஈடுபட்டிருந்தன.

## சமாசத்தில் கல்விப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூடடுறவுச் சங்கங்களின் சமாசம் 2012ம் ஆண்டின் சமூக மேம்பாட்டு கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சமாச மண்டபத்தில் எதிர்வரும் 09-02-2012 அன்று கல்விப் பயிற்சி நெறியினை நடத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் சங்கங்கள், கொத்தணிகளின் கல்வி உத்தியோகத்தர்கள், கிளை மேற்பார்வையாளர்கள், சங்கம் ஒன்றிலிருந்து இரு கிளைமுகாமையாளர்கள் ஆகியோர் பயிற்சியாளர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

சமாசத் தலைவர் நா.கணேசன் அவாக்ள் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியினை யாழ்.கூ.அ.உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் ஆரம்ப உரை நிகழ்த்தி ஆரம்பித்து வைப்பார்.

இப்பயிற்சியின் விரிவுரையாளர்களாக மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ் சேசாதிநாதன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் இ.விஜயமோகனராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பருத்தித்துறை சங்கத்தில் கௌரவிப்பு விழா நிகழ்வு!

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து கௌரவிப்பு விழா ஒன்றினை சங்கப் பணிமனையில் அண்மையில் நடத்தியுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூ.அ.உ. ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் இ.விஜயமோகனராஜா, மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அங்கத்தவர் பொ.சிவராசா, பணியாளர் சி.சிவப்பிரகாசம். உயர்கல்வி வாய்ப்புப் பெற்ற செல்வன் ந.சங்கர், செல்வன் ந.சகிந்தன், செல்வி ச.சங்கீதா, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த செல்வி செ.தூரிகா, ஓய்வூதியம் பெறும் ஆ.சின்னராசா, ந.கந்தையா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

## புதிய நிர்வாகம் தெரிவு!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 17.01.2012ல் நடைபெற்றபோது புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திரு.நா.கணேசன், உபதலைவராக திரு.கி.தவராசா, செயலாளராக திரு.த.சிவலிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் செ.காந்தராசா, சி.சிவகுமார், வ.முத்துராசா, அ.சின்னராசா, கி.பூபாலசிங்கம், சு.பெ.பெர்னாண்டோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி; பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் பனை தென்னை வள அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பு கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு.இ.இராஜாராம் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளின் முகாமையாளர்கள், மற்றும் கல்வி உத்தியோகத்தர்கள் பயிற்சியாளர்களாக கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியின் வளவாளராக "கிராமிய வங்கிகளின் அமைப்பு முறையும் அதன் தொழிற்பாட்டு வகைகளும்" என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற வலி-கிழக்கு வட பகுதி ப.நோ.கூ.சங்க வங்கிச் சேவை முகாமையாளர் ந.சிவபாலசுந்தரம் கலந்துகொண்டு உரையாற்றினார்.




இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.